# மேல்நிலை முதலாம் ஆண்டு

## சிறப்புத் தமிழ்

## மாதிரி வினாத்தாள்

**காலம் : 2.30 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 90**

## மாதிரி வினாத்தாள்

## பகுதி – I

**I. கீழ்வருவனவற்றுள் இருந்து பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்** **20 X 1 = 20**

1. இந்தியா பல செல்வங்களைக் கொண்டதெனக் கூறி உணர்த்தும் அடி எது ?
அ. மாநதியுள் வானதியே மல்கு திருநாடு
ஆ. உலகில் விளைபொருளெல்லாம் உதிக்கின்ற நாடு
இ. கலைகளொடு மறைமுடியைக் கண்ட தவநாடு
ஈ. ஒண்தொழிலும், வாணிகமும் ஓங்கிய சீர்நாடு

2. ‘கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை நீட்டி யளப்பதோர் கோல்’ – இக்குறள் வெளிப்படுத்துவது யாது ?
அ. நட்பாராயும் முறை
ஆ. நட்பு ஆராயாத போது நேரும் துன்பம்
இ. நட்புக் கொள்ளலாகாதாரின் குணம்
ஈ. நட்பால் பயன்பெறுபவரின் நிலை

3. ‘வளி முதலா எண்ணிய மூன்று’ எனும் திருக்குறளில் குறிக்கப்படும் தொகைப் பெயர்களாகக் கீழே உள்ளன. அவற்றுள் பொருந்தாதது எது ?
அ. முக்குணம்
ஆ. முப்பிணி
இ. மும்மருந்து
ஈ. முப்பொருள்

4. “ ஊதை யவிழ்த்த புடையிதழ் ஒண்ணீலம்’’ எனும் அடியில் குளிர்காலத்தைக் குறிப்பாக உணர்த்தும் சொல் எது ?
அ. ஊதை
ஆ. அவிழ்
இ. இதழ்
ஈ.நீலம்

5. கைகேயியின் அருள் தோற்றத்தை வெளிப்படுத்தக் கம்பர் தரும் அடி எது ?
அ. கடைக்கண் ணளிபொழிய பொங்கணை மேற்கிடந்தாள்
ஆ. பாற்கடற் படுதிரைப் பவள வல்லியே
இ. பேருவமை சால் செம்பொற் சீறடி
ஈ. நாற்கடல் படுமணி நளினம்



www.Padasalai.Net

6. ‘மலைபோலக் குவிந்திருந்த வணிக ரூடே’ – இத்தொடரில் வணிகர் குவிந்த இடம் எது ?
அ. மலை
ஆ. தெரு
இ. ஆலயம்
ஈ. வழிநடை

7. உழைப்பின் உயர்வை உணர்த்தும் பாரதியின் பாடலடி எது ?
அ. அரும்பும் வேர்வை உதிர்த்து
ஆ. இழைநூற்று நல்லாடை
இ. காட்டும் வையப் பொருள்கள்
ஈ. பெரும்புகழ் நுமக்கு

8. ‘குழந்தையின் தளிர்க்கை பட்ட கூழினை உண்டல் இன்பம்’ – இவ்வடியிலுள்ள ‘தளிர்’ எனும் சொல் உணர்த்தும் பொருள் யாது ?
அ. மென்மையான
ஆ. சிறிய
இ. வளைந்த
ஈ. குறுகிய

9. ‘வெட்டி வீழ்ந்தது மரமல்ல சந்ததியினர்’ – இந்த ஹைக்கூ உணர்த்துவது
அ. இயற்கை நன்மையையே தரும்
ஆ. மரங்கள் வளருவதால் மாசு நீங்கும்
இ. இயற்கை வளத்தை அழிப்பதால் பெருங்கேடு வரும்
ஈ. மரங்களை வெட்டியவர்களின் சந்ததியர்கள் அழிவர்

10. கீழுள்ள ஓரெழுத்து ஒரு மொழிகளில் எது விலங்கினைக் குறிக்கிறது ?
அ. ஆ
ஆ. கா
இ. நை
ஈ. சா

11. கலை, கல்வி ஆகிய இரண்டிற்கும் உரிய பகுதி(ச்சொல்)
அ. கல்லு
ஆ. கல்
இ. கலை
ஈ. கலு

12. கங்கை கொண்டான் எனும் பெயர் கொண்ட மன்னன் யார் ?
அ. பராக்கிரம பாண்டியன்
ஆ. இராஜேந்திரன்
இ. குலசேகரன்
ஈ. அதிவீரராமன்



www.Padasalai.Net

13. சமுதாயம் விரிவடைந்து விட்டதால் ஏற்பட்ட தீமையாக மு.வ. குறிப்பது ?
அ. நல்லவர் தீயவரை அறிதற்கான வாய்ப்பில்லாமை
ஆ. ஆசையும் அச்சமும் நீங்கியமை
இ. பாவ புண்ணியத்தை நோக்காமை
ஈ. பொறுமை இல்லாமை

14. கம்பராமாயணத்தைப் பொதுக்காப்பியம் எனக் கூற ம.பொ.சி. உரைக்கும் காரணம் யாது ?
அ. எல்லா மதக் கருத்துக்களைக் கொண்டிருத்தல்
ஆ. எல்லாச் சமயத்தவரும் பாராட்டல்
இ. வழிநூல் எனக் கருத இயலாதவாறு இருத்தல்
ஈ. மதத்தையும், அரசியலையும் இணைத்தல்

15. அவர் தலைவருள் இமயமாய், தொண்டருள் சிந்துவாய்த் திகழ்ந்தார் இந்த வாக்கியம் தரும் பொருளை கீழுள்ள எந்த வாக்கியம் கொண்டுள்ளது ?
அ. அவர் தலைவர்களுள் சிறந்தவர் ; தொண்டர்களைப் போற்றுபவர்
ஆ. அவர் தலைவருக்கெல்லாம் தலைவர் ; ஆனால் தொண்டர்களுக்கு எளிமையானவர்
இ. அவர் தலைவர்களுள் உயர்ந்தவர் ; தொண்டர்களால் போற்றி வணங்கப்படுபவர்.
ஈ. அவர் மிகவும் நல்லவர் ; தொண்டர்களுக்கு இனியவர்

16. எழுத்து பிறக்கும் முயற்சி பற்றிக் கூறும் நன்னூல் நூற்பா எது ?
அ. அஃகிய இ உ ஐ ஔ மஃகான்
ஆ. எழுத்து முதல் சார்பு என இரு வகைத்தே
இ. ஆவி இடைமை மிடறு ஆகும்.
ஈ. அண்பல் அடிநா முடியுறுந் த ந வரும்

17. பவணந்தியார், தலை மாணாக்கருக்குக் காட்டும் உவமை யாது ?
அ. மண்
ஆ. கிளி
இ. ஆடு
ஈ. அன்னம்

18. கீழே குறிக்கப்பட்டுள்ள எண்களுள் எது ஓரெழுத்து ஒரு மொழியின் எண்ணிக்கையினைக் குறிக்கிறது ?
அ. 10
ஆ. 27
இ. 36
ஈ. 42


http://www.trbtnpsc.com/2017/08/11th-public-exam-official-govt-model-question-papers-download.html

19. கீழுள்ளனவற்றுள் எது தொழில் உவமைக்கு எடுத்துக்காட்டாகும்?
அ. சிங்கம் போலச் சீறினான்
ஆ. அம்பு போல விரைந்தான்
இ. மலர் போன்ற முகம்
ஈ. கனியன்ன இன்மொழி

20. சொற்பொருள் பின்வருநிலை அணியின் வரையறை யாது?
அ. ஒரே பொருளைத் தரும் வெவ்வேறு சொற்கள் வருதல்
ஆ. வெவ்வேறு பொருளைத் தரும் ஒரே சொல் வருதல்
இ. ஒரே சொல் மாறாத பொருளில் வருதல்
ஈ. வெவ்வேறு சொல் வெவ்வேறு பொருளில் வருதல்

## பகுதி– II

**II பின்வருவனவற்றுள் எவையேனும் ஏழு வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடை தருக, வினா எண். 22க்கு கண்டிப்பாக விடையளிக்க வேண்டும்.** **7 X 2 = 14**

21 தமிழன்னையை நவாலியூர் க.சோமசுந்தரப் புலவர் பனுவல் பிராட்டி எனக் குறிப்பதேன்?

22. ‘வினையிடை நின்ற சான்றோர் போல’ இது யாருடைய நிலை? யாரால் உரைக்கப்படுகிறது?

23. நாயகக் கடவுளான நபி முகம்மது எத்தகையவர் ?

24. தொழிற்புரட்சி வேண்டும் என்பதை பாரதியார் பாடல் வழி விளக்குக.

25. கவிஞர் துரை ஜெயப்பிரகாஷின் ‘தங்கமீன்’ வெளிப்படுத்தும் உலக இயல்பு யாது?

26. தமிழ்நாட்டின் இயற்கை வளத்தை எடுத்துரைக்க, அறிஞர் அண்ணா தரும் மேற்கோள் ஒன்றனைத் தருக.

27. தமிழகத்திற்குப் பெருமை தந்த கலைகளாக நாவலர் நெடுஞ்செழியன் குறிக்கும் கலைகள் யாவை?

28. சித்திராநதியின் சிறப்பாக டாக்டர்.ரா.பி.சேதுப்பிள்ளை கூறுவது யாது?

29. இன்றைய நகரவாழ்க்கை பற்றி மு.வ. அவர்களின் கருத்து யாது?

30. ‘கம்பனோடு கவிதை போயிற்று’ என யார் எப்போது கூறியுள்ளார்?


http://www.trbtnpsc.com/2017/08/11th-public-exam-official-govt-model-question-papers-download.html

## பகுதி – III

**III பின்வரும் வினாக்களுள் எவையேனும் ஏழு வினாக்களுக்கு மட்டும் விடை தருக. வினா எண். 36க்கு கண்டிப்பாக விடையளிக்கவும். 7 X 3 = 21**

31. எத்தகையவரிடம் நட்புக் கொள்ளுதல் வேண்டும் என வள்ளுவர் கூறுகிறார் ?

32. வையை ஆற்றின் வளம் பரிபாடலில் எவ்வாறு காட்டப்படுகிறது ?

33. பாஸ்கா திருநாளன்று இயேசு எருசலேம் நகரிலுள்ள தேவாலயத்தில் புகுந்து புரிந்த செயல்கள் யாவை ?

34. இதழ்களின் பயன்கள் குறித்து நின் கருத்துகளைக் கூறுக.

35. பண்டைத் தமிழக வேளிர்கள் பற்றியும், அவர்கள் ஆண்ட பகுதிகள் பற்றியும் கூறுக.

36. கம்பன் பற்றிய பழமொழிகளைக் குறிப்பிட்டு, அவற்றுள் பொதிந்துள்ள கருத்தைத் தெளிவுபடுத்துக

37. பாடங்கேட்கும் முறையாக நன்னூலார் கூறுவன யாவை ?

38. வினா வகைகளைச் சான்றுடன் விளக்குக.

39. கலிப்பாவின் பொது இலக்கணம் கூறுக.

40. ஓர் எடுத்துக்காட்டின் வழி உவமையின் கூறுகளை விளக்குக.

## பகுதி – IV

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 7 X 5 = 35**

41. 'செந்தமிழ்ச் செல்வி'...... எனத் தொடங்கும் மொழிவாழ்த்துப் பாடலை அடி பிறழாமல் எழுதுக

(அல்லது)

'ஊதியம்'..... எனத் தொடங்கும் குறட்பாவையும், 'ஆறு'..... என முடியும் குறட்பாவையும் அடிபிறழாமல் எழுதுக.

42. குறிஞ்சிப் பாட்டு காட்டும் பண்டைத் தமிழ் மக்களின் பழக்க வழக்கங்களில் சில இக்காலத்தும் பின்பற்றப்படுவதைக் காட்டுக.

(அல்லது)

கைகேயி தீயகுணம் கொண்டவள் அல்ல என்பதை மந்தரை சூழ்ச்சிப் படலச்



www.Padasalai.Net

செய்திகள் கொண்டு நிறுவுக.

43. கலைகள் தமிழுக்குச் சொந்தமானவை என்று நாவலர் நெடுஞ்செழியன் எவ்வாறு நிறுவுகிறார் ?

(அல்லது)

தென்காசியைச் சுற்றியுள்ள தொன்மைமிக்க இடங்கள் பற்றிக் கட்டுரை வரைக.

44. நல்ல சமுதாயம் உருவாக மு.வ. தரும் அறிவுரை யாது ?

(அல்லது)

பல்வேறு நடை வகைகளுள் எவையேனும் மூன்று நடை வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக ?

45. சைகைமொழி, போலிமொழி, உணர்ச்சி மொழி இவற்றை விளக்குக.

(அல்லது)

தொல்காப்பியத்தின் சிறப்பு குறித்து எழுதுக ?

46. திருக்குறளின் பெருமையைப் பற்றிக் கூறுக.

(அல்லது)

சங்க இலக்கியங்கள் எவை ? அவற்றுள் எவையேனும் இரண்டு பற்றி விளக்குக.

47. 'கேடில் விழுச்செல்வம் கல்வி' – இத்தொடரை விளக்கிக் கட்டுரை வரைக.

(அல்லது)

நும் ஊரில் குடிநீர் வசதி வேண்டி உரிய அலுவலருக்கு விண்ணப்பம் வரைக.

--------


http://www.trbtnpsc.com/2017/08/11th-public-exam-official-govt-model-question-papers-download.html
www.Padasalai.Net